**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC No. 106 /2023**

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.சா.4 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ரஞ்சித் | த/பெ.: | தனபால் |
| கிராமம்: | பாமனி, உம்பளச்சேரி மெயின் ரோடு | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | பூக்கடை |
| வயது: | 25 | முகவரி: | பாமனி, உம்பளச்சேரி மெயின் ரோடு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 27.01.2025

**முதல் விசாரணை:_**

எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் எனக்கு தெரியும். இறந்துபோன பெண்ணின் தந்தை பெயர் மாரிமுத்து. மாரிமுத்து மகளான சந்தியா என்பவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சந்தியா என்பவர் இறப்பதற்கு முன்பாக பாரதி காலனியில் குடியிருந்து வந்தபோது இறந்துவிட்டதாக சொன்னார்கள். அந்த இடத்தை 15.02.2022ல் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திலருந்து போலிசார் வந்து பார்த்தார்கள். பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். போலிசார் கேட்டுக்கொண்டதன் பெயரில் நானும், மாதவன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். பார்வை மகஜரில் இரண்டவதாக

போடப்பட்ட கையெழுத்து என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ- 2 ஆகும்.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.